புதுச்சேரி அரசு

போக்குவரத்துத் துறை

***

<u>செய்திக் குறிப்பு</u>

புதுச்சேரி போக்குவரத்து துறையின் **PY-01 DA** (புதுச்சேரி) வரிசையில் உள்ள பேன்ஸி எண்களை **https://parivahan.gov.in/fancy** என்ற இணைய தளத்தில் 22.11.2022 காலை 11.00 மணி முதல் 29.11.2022 மாலை 5.00 வரை ஏலம் விடப்பட உள்ளது.

எனவே, இந்த ஏலத்தில் பங்கு பெறுவதற்கு தேவையான பெயர் (User Name) மற்றும் கடவு சொல்லை (Password) **https://parivahan.gov.in/fancy** என்ற இணையதளத்தில் **"New Public User"** மூலமாக 22.11.2022 முதல் 28.11.2022 வரை பதிவு செய்து கொள்ளலாம். மேலும் தங்கள் விருப்ப எண்ணிற்காக பதிவு செய்வதற்கு அடிப்படை தொகை (Base Price) மற்றும் பதிவு கட்டணம் (EMD) தொகைகளை இணையதளம் மூலமாக செலுத்த வேண்டும். இவ்வாறு பதிவு செய்து பணம் செலுத்தியவர்கள் மட்டுமே 29.11.2022 காலை 10.00 மணி முதல் மாலை 5.00 வரை நடைபெறும் ஏலத்தில் பங்கு பெறலாம்.

இந்த E-Auction முறையில் பங்கு பெற விரும்பும் பொது மக்கள் அதற்கான வழிமுறைகள் மற்றும் <u>ஏல நிபந்தனைகளை</u> 22-11-2022 முதல் **https://transport.py.gov.in** என்ற இணைய தள முகவரியில் பார்க்கலாம்; மேலும், பதிவு இறக்கமும் செய்துகொள்ளலாம். அடிப்படை தொகை (Base Price) மற்றும் விண்ணப்பத் தொகையின் விவரம், ஏல நிபந்தனைகள் குறித்த விவரங்கள் மற்றும் இது சம்பந்தமான இதர விபரங்களை போக்குவரத்துத் துறை அலுவலகத்திலும் தெரிந்துகொள்ளலாம். இந்த ஏலம் சம்பந்தப்பட்ட பண பரிவர்த்தனை அனைத்தும் இணையதளம் (Online Payment) வாயிலாக மட்டுமே பெறப்படும். நேரிலோ மற்றும் காசோலையாகவோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

21/11/2022

(Dr.A.S. சிவக்குமார்)

போக்குவரத்து ஆணையர்